பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 22 | திங்கட்கிழமை | 09.10.2023 | அதிர்வு 69

## கிளிநொச்சி நீதிமன்றில் 120 கிலோ கஞ்சா மாயம்

**பாதுகாப்பு அறையில் இருந்த வேளை**

நீதிமன்றப் பாதுகாப்பு அறையில் இருந்த 120 கிலோ கஞ்சா பொதி மாய மான சம்பவத்தை அடுத்து விசேட குற்றத் தடுப்புப் பிரிவு தீவிர விசாரணைகளில் களமிறங்கியுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றில் 02

**O ஜெனிவாத் தீர்மானம் நிராகரிப்பு O சர்வதேச விசாரணைக்கு மறுப்பு**

# ரணிலின் திராணியை மெய்ச்சுகிறார் கோட்டா

**முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்றும் புகழாரம்**



- சுடர் திலீபன் -

“இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங் களை அடியோடு நிராகரித்து - சர்வதேச விசா ரணைகளுக்கு அனுமதி இல்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்டுகின் றேன்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தெரிவித்தார். 02

# மட்டக்களப்பில் பொலிஸ் அராஜகம்!

## போராட்டக்காரர்கள் கடும் சீற்றம்

- மட்டக்களப்பு நிருபர்கள் -

“பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸா ரின் தொப்பியைக் கழட்டி கேடுகெட்ட வார்த்தைகளால் திட்டும்போது அமைதி யாகப் பார்த்துக்கொண்டிருந்த பொலி ஸார் அமைதியான முறையில் போராட வந்த எங்களை அடக்குவ தற்கு முற்படுவதானது இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் தமி ழர்களுக்கு ஒரு சட்டம் என்பதை வெளிப் படுத்துகின்றது.”

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவ னைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத 07






# இரு மாணவர்கள் நீரில் மூழ்கிப் பலி

**‘டிக்டொக்’கால் வந்த விபரீதம்**

- கனகராசா சரவணன் -

டிக் டொக் வீடியோ எடுப்பதற்காகப் படகில் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளனர்.

இந்தப் பரிதாப சம்பவம் மட்டக்களப்பில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு – நாவலடி 07




காரைக்கால் – காங் கேசன்துறை பயணி கள் கப்பல் சேவை கைவிடப்பட்டு, இப் போது நாகைப்பட்டி னம் – காங்கேசன் துறை பயணிகள் சேவை நாளை முதல் தொடங்குகின்றது. இந்த மாற்றம் பயணிகளுக்கு மிகவும் அனுகூலமான விடயமே.

நாகை இறங்கு துறைக்குப் பக்கத்தில் ரயில் நிலையம். அங்கிருந்து சென்னைக் கும் பிற இடங்களுக்கும் தாராள ரயில் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேவைகள் உண்டு. இந்தப் பயணிகள் கப்பல் சேவையில் ஒவ்வொரு பயணியும் தலா ஐம்பது கிலோ வரை பொருள்களை எடுத்துச் செல்ல முடியும் என்பது இன்னொரு வரப்பிரசாதம். சரக்குகளை எடுத்துச் சென்று வரும் 'குருவி'களுக்கு இது நல்லதோர் மார்க்கம்.

இந்தச் சேவைத் திட்டம் நீண்ட காலம் இழுபட்டு, இப்போது திடுதிப்பென ஆரம்பிக்கப்பட்டாலும், இது தற்காலிக ஏற்பாடுதான்.

இதே மார்க்கத்தில் நிரந்தர ஒழுங்கு விரைவில் வேறு விதமாக நடைபெறும்.

இந்த மார்க்கத்தில் தனியார் கப்பல்களே சேவையில் ஈடுபடவிருக்கின்றன. ஆனால் அதற்குக் கால தாமதமாகும் என்பதால், இப்போது இந்திய அரசே நேரடியாகத் தற்காலிகமாக மாற்று ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேலும் காலதாமதமின்றி இந்தச் சேவையை உடன் தொடங்க வேண்டும் என்று இந்தியாவின் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு புதுடில்லியில் இருந்து கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையை அடுத்தே விடயம் அவசர அவசரமாக ஒப்பேறி இருக்கின்றது.

தனியார் கப்பல்கள் உடனடி சேவைக்கு வராமல் தாமதிப்பதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள்.

ஒன்று - வரும் நவம்பர் நடுப்பகுதியில், அதாவது இன்னும் ஐந்து வாரங்களில், இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான கடல் பருவக் காலநிலை காரணமாக கொந்தளிப்பு மிக்கதாக மாறிவிடும். அதன் பின்னர் இரண்டு மாதங்களுக்கு கப்பல் சேவைக்கு வாய்ப்பில்லை. ஜனவரி நடுப் பகுதியில்தான் கடல் ஓரளவுக்குச் சீராகும். சேவையை மீள ஆரம்பிக்க முடியும். இப்போது ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்தி, அது வந்து சுமார் ஒரு மாதம் சேவையை நடத்திய பின்னர், அடுத்த இரண்டு மாதங்கள் மீளவும் துறைமுகத்தில் அதனைக் கட்டி வைத்து, அக்காலத்துக்கும் பெரும் வாடகைப் பணத்தைச் செலுத்தி நஷ்டப்பட எந்தக் கப்பல் கம்பனியும் தயார் இல்லை. ஆகவே ஜனவரி நடுப்பகுதியில் இருந்து சேவையை ஆரம்பிக்கவே அவை விரும்புகின்றன.

அடுத்தது - இந்த சேவையை ஆரம்பிக்க முன்னர் இந்தப் பயண மார்க்கத்திற்கான 'ரூட் மனுவல்' (Route Manual) தயாரிக்கப் பட வேண்டும். மூன்று தடவைகள் இந்த மார்க்கத்தில் பயணித்தால்தான் அதனை உருப்படியாகத் தயாரித்துக் கொடுக்க முடியும். பயணிகளின்றி, இந்தியப் பணத்தில் சுமார் 18 அல்லது 20 லட்சம் ரூபா செலவழித்து, மூன்று தடவைகள் கப்பலை இங்கு மங்குமாக செலுத்தி, இந்த ரூட் மனுவலைத் தயார் செய்து அளிக்கத் தனியார் கப்பல் நிறுவனங்கள் தயாரில்லை.

அதனால்தான் இந்த விடயங்களைக் கையாளும் பொறுப்பு தமிழ்நாடு கடலோரக் கட்டமைப்பு மற்றும் இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடம் வழங்கப்பட்டன.

கொச்சினுக்கும் லட்சத்தீவுக்கும் இடையில் தினசரி பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'செரியாபாணி' கப்பலை இந்தச் சேவைக்காகத் தற்காலிகமாகத் திருப்பி விட்டிருக்கின்றது இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனம்.

வடக்கு இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை சுமார் 40 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் நாளை ஆரம்பமாகின்றது.

நாகைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான தூரம் சுமார் 64 கடல் மைல்கள். ஏறத்தாழ மூன்றரை முதல் 4 மணி நேரப் பயணம். ஒரு தடவையில் 150 பேர் பயணிக்க முடியும்.

பெரும்பாலும் நாளை இந்தப் பயணிகள் கப்பல் சேவையை புதுடில்லியில் இருந்தவாறு நிகழ் நிலையில் பிரதமர் மோடி கொடி அசைத்து ஆரம்பித்து வைக்க நாகையிலிருந்து கப்பல் புறப்படும்.

கடற் கொந்தளிப்பு காரணமாக நவம்பர் நடுப்பகுதியில் சேவை நிறுத்தப்பட்டு, ஜனவரி நடுப்பகுதியில் மீள ஆரம்பிக்கப்படும்போது தனியார் கப்பல் சேவையாக அது முழு அளவில் மாறி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரணிலின் திராணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியபோது புதிய ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன். அதற்கமைய நாடாளுமன்றம் அவரை புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார்.

இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை. நாடாளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்க முடியாது. நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். உண்மையில் அவர் சிறந்த தலைவர்."

- என்றார்.

## கிளிநொச்சி நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னிலைப்படுத்தப்பட்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்ட 120 கிலோ கஞ்சா மாயமான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கஞ்சா இவ்வாறு மாயமாகியுள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து, புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்தநிலையில், கொழும்பிலிருந்து விரைந்த விசேட குழு விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன் அடிப்படையில் ஊழியர்கள் மூவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டது.

இதேவேளை, களஞ்சியப் பகுதியிலிருந்து மதுபானங்கள் உள்ளிட்ட அழிக்கப்பட வேண்டிய பொருட்களும் காணாமல்போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

களஞ்சியப் பொறுப்பில் இருந்த இருவர் கனடா செல்ல முற்பட்ட நிலையில் அவர்களுக்கான பயணத் தடை விதிக்கப்பட்டதுடன், துப்பரவுப் பணியில் இருந்த பெண் ஒருவர் மத்திய கிழக்கு நாட்டுக்குச் செல்ல முற்பட்ட நிலையில் அவருக்கும் தடை விதிக்கப்பட்டது.

புதிதாகப் பொறுப்பெடுத்த சான்றுப் பொருள் களஞ்சியத்துக்குப் பொறுப்பான ஊழியர்கள் பூட்டு உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பதிவாளருக்கு வழங்கிய தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.




# பொருளாதார ரீதியில் கிழக்கை பலப்படுத்த பத்து வருடத் திட்டம்

## மட்டக்களப்பில் வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு



திருகோணமலையின் அபிவிருத்தி உட்பட கிழக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு அடுத்த 10 வருடங்களில் விரிவான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட இரண்டு மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நிலாவெளி முதல் பானம வரையிலான விரிவான சுற்றுலாத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று காலை கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:-

"மட்டக்களப்பு ஒரு அதிர்ஷ்டமான மாவட்டம். சுமார் 150 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இரண்டு பாடசாலைகள் இங்குள்ளன. நான் நேற்று புனித மைக்கல் கல்லூரியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். இன்று செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்துள்ளேன்.

மறைந்த அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகன் இந்தப் பாடசாலையில் கற்றவர். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமைச்சரவையில் நான் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். இப்பாடசாலையில் செங்கலடி, கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் உயர்தரக் கல்வியைப் பெற முடிந்தது.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது அதனைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், சில மாணவர்கள் கணக்கியல் உள்ளிட்ட ஏனைய பாடநெறிகளை படிக்கின்றனர்.

மேலும், இந்த மாணவர்கள் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்தப் பாடசாலையில் சிறந்த தொழில்நுட்ப ஆய்வகம் இல்லை. எனவே, இப் பாடசாலைக்கு உயர்மட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இந்த பாடசாலை முன்னேற்ற வேண்டும். இங்கு மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி நடனத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

இன்று செங்கலடி பிரதேசம் அபிவிருத்தியடைந்துள்ளது. இப்பகுதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவான அமைச்சர்களான தேவநாயகன் மற்றும் ராஜதுரை ஆகியோரின் விருப்பமும் அதுவே. அந்த ஆசையை நிறைவேற்றுவோம்

.மட்டக்களப்பு மாவட்டம் கல்வியினால் அபிவிருத்தியடைந்துள்ளது. ஆனால் பொருளாதாரம் இன்னும் வலுவாக இல்லை. அடுத்த 10 வருட திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் பொருளாதார ரீதியாக பலப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

மகாவலி திட்டத்தின் ஊடாக இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன திட்டமிட்டிருந்தார். ஆனால் யுத்தம் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. தற்போது திருகோணமலை மாவட்டத்தை இந்தியாவுடன் இணைந்து பாரிய நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பியகமவில் 400 ஏக்கர் முதலீட்டு வலயம் உள்ளது. ஆனால் திருகோணமலை 1000 ஏக்கர் முதலீட்டு வலயத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகம் முறையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கான திட்டத்தை சுபானா ஜூரான் சிங்கப்பூர் நிறுவனம் தயாரித்துள்ளது. அதனை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

அப்போது திருகோணமலை பாரிய நகரமாக உருவாகும். மேலும் இது பொருளாதார ரீதியாக வலுவான மையமாக மாறும். மறுபுறம், விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை முன்னேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில் நவீன விவசாயத் துறையை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இந்த மாகாணம் தற்போது அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளது.புதிய பயிர்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்பிக்காக புதிய கால்நடைகளை வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு இலங்கையில் உள்ள அம்பேவெல போன்ற உள்நாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் பெற எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக நிலாவெளி முதல் பானம வரையிலான சுற்றுலா வலயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. காடு மற்றும் ஏரி பகுதிகள் சுற்றுலாத்துறைக்காக மேம்படுத்தப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 10 வருடங்களில் திருகோணமலை நகரின் அபிவிருத்தி, மகாவலி ஏ மற்றும் பீ பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இந்த மாகாணங்களில் புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சினையான பால் பண்ணையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்." – என்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், செங்கலடி மத்திய மகா வித்தியாலய அதிபர் தேவதாசன் குகதாசன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இஸ்ரேலில் இருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் தகவல்



இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் நாடுகளுக் கிடையல் இடம்பெற்று வரும் மோதல் களுக்கு மத்தியில் இஸ்ரேல் நாட்டில் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டு வரும் இங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த அந்த நாட்டு தூதரகத்துடன் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத் திருக்கிறது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சா ளருமான காமினி செனரத் தெரிவித் துள்ளார்.

அத்துடன் இஸ்ரேலில் இலங்கை யர்கள் தொழில் செய்யும் இடங்களில் ஏதேனும் பிரச்சினை இருக்குமானால் அவர்கள் 0094716640560 என்ற வட்ஸ் அப் இலக்கத்துக்கு தகவல் வழங் குமாறு தெரிவித்திருக்கிறோம். அவ்வாறு அவர்களுக்கு ஏதேனும் தேவை எனத் தகவல் வழங்கினால் அது தொடர்பில் தூ தரகம் ஊடாக நடவடிக்கை எடுப்போம்.

மேலும் இலங்கையர்களின் தகவல் களை பெற்றுக்கொள்வதற்கெனத் தூத ரகத்தில் இரண்டு அதிகாரிகள் முழு நேர கடமைக்காக நியமிக்கப்பட்டுள் ளனர்.

அதேநேரம் இஸ்ரேலில் இருக்கும் உங்கள் உறவினர்கள் தொடர்பாக

எந்தத் தகவலும் வழமைப்போன்று கிடைக்கவில்லைஎன்றால்,அதுதொடர்பில் 1989 என்ற துரித இலக்கத்துக்கு தகவல் வழங்கினால் தூதரகம் ஊடாக அது தொடர்பான தகவல்களை கேட்டறிந்து அறிவிப்போம் எனவும் பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம்!

## பரிசீலனை செய்யப்படுகிறது என்கிறார் பிரதமர்

இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர் பில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது எனவும் இந்த விடயம் தொடர்பில் இருதரப்பு மீனவர்களும் புரிந்துணர் வுடன் செயற்பட வேண்டும் எனவும் பிரத மர் தினேஷ் குணவர்தன தெரிவித் துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில் –

மீன்கள் எல்லாப் பக்கங்களும் செல லக் கூடியன. மீனவர்கள் மீன்களை பின் தொடர்ந்து சென்று பிடிக்கிறார்கள். பாக்கு நீரிணை ஒரு சிறிய பகுதியாகும். இதுப்பற்றி விரிந்த பேச்சுகள் நடத்துகின் றோம். தற்போது உடன்பாடுகளும் எட் டப்பட்டுள்ளன. கைதான இந்திய மீன வர்கள் சிலர் நல்லெண்ண அடிப்படை யில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை பிடிக்கப்படும் படகுகளும் விடுவிக்கப்படுகின்றன. வட பகுதியில் சிறந்த மீன்பிடி வளம் உள்ள பகுதியாகும். இந்திய மீனவர்களுக்கு அனுமதி பத்தி ரம் வழங்குவது பற்றி பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டில்லிக்கு விஜயம் செய்தி ருந்த போதும் பேசப்பட்டது.

இந்த திட்டத்தை பரிசீலிக்க தயாரா கவே இருக்கிறோம். இருப்பினும் இந்த



இரண்டு தரப்பு மீனவர்களின் ஒத்து ழைப்பும் அவசியமாக உள்ளது. ஏனென் றால் இது அரசு தரப்பு சார்ந்த விடயம் மட்டுமல்ல. பிரதானமாக மீனவர்கள் சம்பந்தப்பட்டது. இந்த விவகாரத்தில் இருதரப்பு புரிந்துணர்வு கட்டாயம் இருக்க வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.

# ஏ.ரி.எம். இயந்திரத்தைச் சேதமாக்காமலேயே 1 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் சூறை!

## மதுரங்குளியில் தோலிருக்க சுளை விழுங்கிய சம்பவம்

புத்தளம் – மதுரங்குளி 10 ஆம் கட் டைப் பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் ATM இயந்திரத்தில் இருந்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் சூறையாடப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினனம் இரவு 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம்இடம்பெற்றபோது,மதுரங்குளி 10ஆம் கட்டைப் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் ATM இயந்தி ரத்திற்கு மோட்டார் சைக்கிளில் மூவர் முகங்களை மறைத்து மிகவும் சாதாரண மாக வருகை தந்தமை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சீ.சி. ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

அங்கு வருகை தந்த திருடர்கள், ATM இயந்திரம் பழுது என்றும், அத னைத் திருத்தப்போகின்றார்கள் எனவும் கூறி, எவ்விதமான பதற்றமுமின்றி, திறப்பு ஒன்றின் மூலம் ATM இயந்திரத்தின் பின் கதவைத் திறந்து பணம் வைக்கப்பட்ட பாது காப்பு அறைக்குள்ளே சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து, இரகசிய இலக்கங் களை உட் செலுத்தி அந்த ATM இயந்தி ரத்தை திருடர்கள் அந்த இயந்திரத்தில் இருந்த சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தை சுருட்டிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துணிகரமான சூறையாடல் சம்பவத்தில் ATM இயந்திரத்திரத் திற்கோ அல்லது பாதுகாப்பு அறையின் கதவுக்கோ எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த ஏ.ரி.எம். இயந்திரம் அமைந் துள்ள பகுதிக்கு அருகிலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளது. பொது மக்கள் நடமாட்டம் மற்றும் வாகனப் போக்குவரத்துகளின் போதே திருடர்கள் இந்தத் துணிகர சம்பவத்தை நடத்தியமை மக்களுக்கும், பொலிஸாருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட தனியார் வங்கியுடன்



தொடர்புடைய ஒருசிலரின் உதவியுடன் இந்த சூறையாடல் சம்பவம் இடம்பெற்றி ருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் என மதுரங்குளிப் பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பவம் இடத்திற்கு வருகை தந்த புத்த ளம் பொலிஸ் தடயவியல் பிரிவினரும், கை ரேகை பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் காமினி விக் கிரமசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நஸீர் அஹமட் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு கட்சி தாவுவோருக்கு விடுத்துள்ள அபாய எச்சரிக்கை

## முஜீபுர் ரஹ்மான் தெரிவிப்பு



அமைச்சர் நஸீர் அஹமட்டின் கட்சி உறுப்புரிமை நீக்கம் சரியானது என உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று சரித்திரம் மிக்கதாகும் எனவும், இது அரசியல் இலாபங்களுக்காக கட்சி தாவும் தரப்பினருக்கு நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கை என்றும் எதிர்க்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முஜ/புர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் அப்போது கூறியவை வருமாறு:-

குருதூர் மலை விவகாரத்தை முன்னிறுத்தி பாரிய பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்கு கடந்த காலங்களில் பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு காணிப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தனர். சமூக ஊடகங்களின் மூலமாகவும் இனங்களுக்கு இடையில் பிரச்சினையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க சிலர் முயற்சித்து வருகின்றனரா என்ற சந்தேகம் எழுவதாக தோன்றுகின்றது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் 7, 8 மாதங்களே காணப்படும் நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

மேலும் கட்சியின் தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்பட்டமை தவறு என நஸீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இதன்காரணமாக அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும். இடைக்கிடையே கட்சி தாவும் தரப்பினருக்கு உயர் நீதிமன்றம் விடுத்துள்ள அபாய எச்சரிக்கையாக இதை நாம் கருதுகிறோம். குறிப்பாக கட்சியிலிருந்து பலர் அமைச்சு பதவிகளுக்காக சென்றார்கள்.

இவர்களுக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரலாற்று சரித்திரம் மிக்க தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

விருப்பு வாக்கு வழங்குவதற்கு முன்னதாக கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்படவேண்டும்.

கட்டுப்பட முடியாவிட்டால் பதவியில் இருந்து விலக வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்குகளை பெற்று விட்டு பின்னர் நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக செயல்பட நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. நஸீர் அஹமட் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எதிர்காலத்தில் மேலும் பலருக்கு படிப்பினையாக அமையும். - என்று தெரிவித்துள்ளார்.

# இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றது இலங்கை

## இரண்டு ஆண்டுகளுக்கு அதனை வகிக்கும்

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்கவுள்ளது. இது தொடர்பான அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

2023 ஒக்டோபர் 11ஆம் திகதி கொழும்பில் இலங்கை நடாத்தவுள்ள 23 ஆவது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடுத்து வரும் நாள்களில் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவ்வமைப்பின் தற்போதைய தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் தலைமைப் பதவியை வழங்கும்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி சபைக்குத் தலைமை தாங்குவார்.

இந்தக் கூட்டத்திற்கு முன்னதாக, வெளியுறவு செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையில் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 25ஆவது கூட்டம் இன்று மற்றும் நாளை நடைபெறவுள்ளது.

1997 இல் நிறுவப்பட்ட இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கம், இந்து சமுத்திரத்தின் எல்லையிலுள்ள அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் ஆபிரிக்கா, மேற்கு ஆசியா, தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா வரை பரவியுள்ளனர்.

இன்று, இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 23 உறுப்பு நாடுகள் மற்றும் 11 உரையாடல் கூட்டாளர்கள் என்ற அளவில் விரிவடைந்துள்ளது. 23ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் 2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கும்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்பு, மீன்பிடி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில், சங்கத்தால் அடையாளம் காணப்பட்ட ஆறு முன்னுரிமைப் பகுதிகளில் ஒத்துழைப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர்கள் ஆலோசிக்கவுள்ளனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி சல்மான் அல் ஃபரிசி மற்றும் மொரிஷியஸில் உள்ள இந்து சமுத்திர எல்லை சங்க செயலகத்தின் பணிப்பாளர்களும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எமது நாட்டுக்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளமையுடன், இலங்கையில் தங்கியிருக்கும் போது, இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஏனைய அமைச்சர்களுடனும் இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம்;

# அனைத்துத் தரப்புகளுடனும் பேச்சுகள் பரந்துபட்டஅளவில் நடத்த இணக்கம்

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

நிகழ்நிலை இணைய வழி காப்புச் சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தீவிர கரிசனைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அச்சட்டமூலம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பரந்துபட்ட பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஊடகத்துறைசார் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்த சட்டமூலம் தொடர்பில் 3 விசேட தரப்பினருடன் வெகு விரைவில் பேச்சுக்களை முன்னெடுக்கவிருக்கும் அமைச்சர் டிரான் அலஸ், அதனைத்தொடர்ந்து எதிர்வரும் 2 - 3 மாதங்களுக்குள் திருத்தங்களுடன் கூடிய நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் விமர்சனங்களுக்கும் மத்தியில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனையடுத்து அந்தச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், இதுபற்றி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதன்விளைவாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் வெகுவாகப் பாதிக்கப்படக்கூடுமென பல்வேறு தரப்பினரும் கரிசனைகளை வெளிப்படுத்திவருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஊடகத்துறையுடன் தொடர்புடைய சிவில் சமூகப்பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர் டிரான் அலஸ், இந்த சட்டமூலம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற ஊடகத்துறைசார் பிரதிநிதிகள், நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது சம்பந்தப்பட்ட தரப்பினருடனான விரிவானதும் செயற்திறன்மிக்கதுமான கலந்துரையாடல்களின்றிக் கொண்டுவரப்பட்டிருப்பது குறித்தும், அச்சட்டமூலத்தில் 'குற்றமாக' கூறப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கான பரந்துபட்ட வரைவிலக்கணம் மற்றும் அதன் தெளிவற்ற தன்மை குறித்தும் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

அதுமாத்திரமன்றி இந்த சட்டமூலத்தை எவ்வித திருத்தங்களுமின்றி தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றுவதன் மூலம் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றின் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் அவர்கள் அமைச்சரிடம் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.



அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ஆகியவற்றுக்காகக் காத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டிய தன் அவசியம் என்ன என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த கரிசனைகளை செவிமடுத்த அமைச்சர் டிரான் அலஸ், இந்த நிகழ்நிலைக்காப்புச் சட்டமூலம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், இதுகுறித்து 2016 ஆம் ஆண்டு முதல் ஆலோசிக்கப்பட்டுவருகிறது எனவும் விளக்கமளித்தார்.

அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான அத்துமீறல்கள் மற்றும் சட்டவிரோத பாலியல் நடத்தைகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்



வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது என்று பொது ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எலிக் காய்ச்சலைத் தடுப்பதற்கான முன் சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெள்ள நிலைமை காரணமாக ஈக்கள் மற்றும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் போட்ட அவல்

மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் தன் தந்திரப் பேச்சை - வாய்ச்சவாடல் வேலையை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைவிட மாட்டார் என்றே தோன்றுகின்றது.

மட்டக்களப்பில் சென் மைக்கேல் கல்லூரியின் ஆண்டு விழாவில் உரையாற்றுகையிலேயே தமது இந்த போக்கைத் தாம் கைவிட மாட்டார் என்பதை அவர் திரும்பவும் கோடி காட்டி இருக்கிறார்.

செயலில் செய்யாமல் வெறும் வாய்ப் பந்தல் போடும் தமது தகைமையை மீண்டும் அங்கு ஒரு தடவையும் அவர் நிரூபித்துக் காட்டி இருக்கின்றார்.

வண்டியின் குதிரைக்கு முன்னால் கரட்டை கட்டித் தொங்கவிட்டு, குதிரையை ஓடவிடுவது போல, தேசிய இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு என்ற அறிவிப்பை கரட் போல கட்டித் தொங்க விட்டபடி தனது ஆட்சி வண்டியை ஓட்டி முடிக்கலாம் என்று சிந்திக்கிறார் போலும் அரசியல் நரி தந்திரசாலியான ரணிலார்.

இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப் பேச்சுக்களை நடத்துவேன் என்றும் -

உள்நாட்டுக்குள் தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தை நாட வேண்டிய தேவை இல்லை என்றும் -

தத்துவம் வேறு உரைத்திருக்கின்றார் அவர்.

விடுதலைப் புலிகள் களத்தில் இல்லாதமையால் வந்த துணிச்சல் பேச்சு இது. புலிகள் பலமாக இருந்த காலத்தில், தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக அவர்களை ஏற்று, நோர்வே அனுசரணையுடன் தாய்லாந்து, ஜப்பான், நோர்வே, ஜேர்மனி என்று பல நாடுகளுக்கும் திரிந்து, சமாதான - சமரச - பேச்சுக்களை நடத்திய அரசின் பிரதமர் அவர்தான்.

இப்போது களத்தில் புலிகள் இல்லை என்பதால் சர்வதேசத்துக்குப் போகத் தேவையில்லை என்று புதுத் தத்துவம் பிளக்கின்றார்.

இனப் பிரச்சினையே தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில்தான். எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்களவர்கள் அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு பேரினவாதிகளாக வெறி கொண்டு நின்றபடி, தமிழர் தேசத்தை - தேசியத்தை - திட்டமிட்டுத் துடைத்தழித்து வருகின்றனர். அதுதான் இனப் பிரச்சினை அடிப்படையும், அதன் தீவிரமும் ஆகும்.

அந்தப் பேரினவாதிகளின் பிரதிநிதியாக நிறைவேற்றதிகாரத் தலைவராக நின்று கொண்டு அந்தப் பேரினவாத மேலாதிக்கத்தையே தீர்வாகத் திணிக்க முயல்கின்றார் ரணில்.

கட்சிக்காரனே நீதிபதியாக இருக்கும் இந்த முறைமையில் நீதி, நியாயமான தீர்வு - தீர்ப்பு - கிட்டப் போவதில்லை என்பது தெளிவு. அப்படி இருந்தும் உள்நாட்டுக்குள் நியாயத் தீர்வு காண முடியும் என்று கனவு காண்கின்றார் ஜனாதிபதி ரணில். அதன் அடிப்படையில் அவ்வப்போது கயிறும் விடுகின்றார்.

ஆட்சிக்கு வந்து சற்றுக் காலத்தில், 75 நாள்களில் - 2023 பெப்ரவரி 4 ஆம் திகதி நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன் - தீர்வு எட்டப்படும் என்றார்.

பின்னர் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி 13 ஐ நடைமுறையாக்குவோம் என்று அறிவித்தார்.

எதுவுமே நடக்கவில்லை - அவரது அறிவிப்புகளால் தேவையற்ற வீண் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டமையை தவிர.

இப்போதும் விரைவில் தீர்வு என்ற அவரது பேச்சு வெறும் வாய்க்கு மெல்லுவதற்கு போட்ட அவல். அவ்வளவுதான்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடியேற்றவாசிகளின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துமாறு கோரி அப்பகுதியைச் சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் கடந்த 24 நாள்களாகப் போராடி வருகின்றனர்.

நேற்று செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தருகின்றதை முன்னிட்டு செங்கலடி – கொம்மாதுறைப் பகுதியில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் அமைப்புபினர், பொது அமைப்பினர் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு முன்பாக அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அப்பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித்தடைகள் போடப்பட்டு நீர்ப்பாய்ச்சும் இயந்திரம், கண்ணீப்புகை இயந்திரங்கள் கொண்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

இந்தநிலையில், நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளது எனவும், வீதியை மறித்து போராட முடியாது எனவும் பொலிஸார் கோரிய நிலையிலேயே போராட்டமானது கடுமையாக மாறி பொலிஸாரின் தடையை மீறிச் செல்ல முற்பட்ட நிலையில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் இழுபறி நிலையேற்பட்ட அதே நேரம் தடையை உடைத்துச் செல்ல போராட்டக்காரர்கள் முற்பட்ட நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கமும் களேபரமும் ஏற்பட்டது.

இதன்போது தடையை உடைத்துச் செல்ல முற்பட்ட மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத் தலைவி மீது பொலிஸார் தாக்குதல் நடத்த முயன்றனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், கவீந்திரன் கோடீஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அதேவேளை, கால்நடைப் பண்ணையாளர்களும், சட்டத்தரணி சுகாஸூம் பொலிஸாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் காரணமாக வாழைச்சேனை – மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டதன் காரணமாக மாற்று வழியூடாக போக்குவரத்துக்கள் இடம்பெற்றன.

## இரு மாணவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குளத்துக்குச் சென்ற 6 மாணவர்கள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதிலேயே இரு மாணவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மாணவர்கள் பயணித்த படகு கரை திரும்பும்போது கவிழ்ந்துள்ளது.

இந்த அனர்த்தத்தில் மட்டக்களப்பு, சீலாமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருஷாந்தன், மாமாங்கத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருந்தயன் ஆகிய மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. செங்கலடி வித்தியாலய நிகழ்வில் ஜனாதிபதி



மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழா கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.















## அத்திப்பள்ளி பட்டாசு களஞ்சியத்தில் தீ விபத்து:

# உயிரிழந்த 14 தொழிலாளர்களின் உடல்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன

கர்நாடக மாநில எல்லை அத்திப் பள்ளியில் பட்டாசு களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்த 14 தொழிலாளர்களின் உடல்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள அத்திப்பள்ளி பொலி ஸார் இருவரை கைது செய்துள்ளனர்.

பெங்களூர் நகர்ப்புற மாவட்டம் கர்நாடக – தமிழக எல்லையில் உள்ள அத்திப்பள்ளியில் உள்ள பட்டாசு களஞ் சியத்தில் நேற்று மாலை திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

வாகனத்தில் இருந்து பட்டாசு பெட்டிகளை இறக்கிக்கொண்டிருக்கும் போதே இந்த எதிர்பாராத விபத்து ஏற் பட்டுள்ளது.

ஒன்பது தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

எனினும் , தீபாவளி பண்டிகைக்காக களஞ்சியத்தில் பல லட்சம் மதிப்பிலான



பட்டாசுகள் வைக்கப்பட்டிருந்ததால் தீ விபத்து கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் உடல்கள் அத்திப் பள்ளியில் உள்ள ஆக்ஸ்போர்டு மருத் துவ கல்லூரிக்கு பிரேத பரிசோதனைக் காக அனுப்பி வைக்கப்பட்டது.

அத்துடன், சிகிச்சை பெற்று வந்த ஓசூரை சேர்ந்த ஒருவர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதைத்தொடர்ந்து, தமிழக சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உணவுதுறை அமைச்சர் சக்கரபாணி ஆட்சியர் சரயு, ஓசூர் உதவி ஆட்சியர் சரண்யா, எம்.எல்.ஏ. பிரகாஷ், மேயர் சத்யா ஆகியோர் இறந்தவர்களின் உடல் களுக்கு மலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், இறந்தவர்களின் உறவினர் களுக்கு ஆறுதல் கூறி தமிழக அரசு அறிவித்த 3 லட்சம் ரூபா நிவாரணம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

# பட்டாசு விபத்து வழக்கு சி.ஐ.டியிடம் ஒப்படைக்கப்படும்!

## - கர்நாடக முதல்வர் சித்தராமையா தகவல்



அத்திப்பள்ளியில் இடம்பெற்ற பட்டாசு கடை தீ விபத்து குறித்து விசாரணையை சி.ஐ.டியிடம் ஒப்படைக்கப்படும் என கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளியில் பட்டாசு கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் தமிழகத்தை சேர்ந்த 14 பேர் உயிரி ழந்தனர். விபத்து இடம்பெற்ற இடத்தில் நேற்று கர்நாடக மாநில முதல்வர் சித்தரா மையா, துணை முதல்வர் சிவகுமார் ஆகியோர் ஆய்வு செய்தனர். பின்னர் அவர் விபத்து குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து சித்தராமையா செய்தியாளர்களிடம் கூறும்போது, தீ விபத்துக்கான காரணங்கள் இன்னும் தெரிய வரவில்லை. நான் ஆய்வு செய்த வரையில் பட்டாசு கடையில் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகான பொருட்களும் இல்லை.

உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 5 லட்சம் ரூபா நிவாரணம் வழங் கப்படும். இந்த விபத்து குறித்த வழக்கு சி.ஐ.டி. வசம் ஒப்படைக்க உள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் இருந்து உயிர்தப்பி பாதுகாப்பாக இந்தியா திரும்பினார் நடிகை நுஷ்ரத் பருச்சா

இஸ்ரேல் மீதான ஹமாஸ் பயங் கரவாதிகள் நடத்தி வரும் யுத்தம் காரணமாக அங்கு சிக்கியிருந்த பொலிவுட் நடிகை நுஷ்ரத் பருச்சா தொடர்பில் தகவல்கள் தெரியாமல் பதற்றம் ஏற்பட்டது. தற்போது நுஷ்ரத் பருச்சா பாதுகாப்பாக இந்தியா திரும்பி உள்ளார்.

இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என இந்திய தூதரகம் எச்சரிக்கை விடுத்தது. இஸ்ரேலில் உள்ள இந்தியர் களை வாட்ஸ் அப் மூலம் தொடர்பு கொண்டும் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும் அறிவுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் இஸ்ரேலில்



நடைபெறும் 39 ஆவது ஹைஃபா சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்க பொலிவுட் நடிகை நுஷ்ரத் பருச்சா அங்கு சென்றிருந்தார். நுஷ்ரத் பருச்சா நடித்த அகெல்லி திரைப்படம் இந்த விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இஸ்ரேல் சென்றிருந்தார்.

தற்போதைய யுத்தத்தின் நடுவே நுஷ்ரத் பருச்சாவும் சிக்கிக் கொண்டார் என அவருடன் சென்ற சிலர் தகவல் அனுப்பினர். இதனால் நுஷ்ரத் பருச்சாவை தொடர்பு கொள்ள பொலிவுட் திரை உலகம் பல முயற்சிகளை முன்னெ டுத்தது. ஆனால் நுஷ்ரத் பருச்சாவை தொடர்பு கொள்ள முடியாததால் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.

இந்த நிலையில், பிற்பகல் நுஷ்ரத் பருச்சா பாதுகாப்பாக மும்பை விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அங்கு செய்தியாளர்கள் எதிர்பார்ப்புடன் காத்திருந்த போதும் எந்த கருத்தையும் நுஷ்ரத் பருச்சா தெரிவிக்காமல் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

# காஸாவிலுள்ள மக்கள் வெளியேறுங்கள்: இஸ்ரேல் இராணுவம் அவசர அறிவுறுத்தல்!



ஹமாஸ் தரப்பினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தங்களது தரப்பினர் மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதேநேரம் ஹமாஸ் தரப்பினருக்கு எதிரான தாக்குதலுக்கு தயாராகும் வகையில் காஸா பகுதியில் உள்ள மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறவேண்டும் என இஸ்ரேல் இராணுவம் அறிவுறுத்தியுள்ளது.

பாலஸ்தீன ஆயுததாரிகளுக்கு இது 'கருப்பு நாள்' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனிய ஆயுதக் குழுவான ஹமாஸ், பாரியளவான ஏவுகணை தாக்குதல்களை நேற்று முன்தினம் நடத்தியது.

ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலால் இஸ்ரேலில் 100 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களில் இஸ்ரேலில் சுமார் 250 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் தெற்கு நகரான ஒபாகிமில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தங்களது தரப்பினர் மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# இராணுவ பயிற்சி முகாமில் தீப்பரவல்: 6 பேர் உயிரிழப்பு, மூவர் படுகாயம்!



தென்னாபிரிக்காவின் இராணுவ பயிற்சி முகாம் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தீப்பரவலினால் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்னாபிரிக்காவின் வடக்கு கேப் மாகாணத்தில் உள்ள இராணுவ பயிற்சி முகாமில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இந்த பயிற்சி முகாமுக்கு அடுத்துள்ள சுரங்கத்தில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இந்த தீ இராணுவ பயிற்சி முகாமுக்கும் பரவியுள்ளது.

இதில் இராணுவ முகாம் மற்றும் அங்கிருந்த வாகனங்கள் போன்றவை எரிந்துள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீயணைப்பு வீரர்களின் முயற்சியால் இந்த தீ அணைக்கப்பட்டது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், 6 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று இராணுவ வீரர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கனடாவில் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதில் இருவர் பலி!



கனடாவில் பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் இந்த விமான விபத்து இடம்பெற்றுள்ளது என சர்வதேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விமானத்தில் சென்ற பயிற்சி விமானிகளான இந்தியர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து கனடா போக்கு வரத்து பாதுகாப்பு சபை விசாரணை நடத்தி வருகின்றது.

# ஐ.ஜி.பியின் பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகிறது

## பதவி நீடிப்பா? புதியவர் நியமனமா?

பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு காலம் இன்றுடன் முடிவடைகிறது.

விக்கிரமரதன் உத்தியோபூர்வமாக பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், அரசாங்கம் அவரது பணிக்காலத்தை இரண்டு முறை நீடித்தது.

இரண்டாவது முறை வழங்கப்பட்ட பணி நீடிப்பு காலம் இன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், அவருக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப்படுமா அல்லது புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவாரா என்பது இதுவரை



தெரியவரவில்லை.

அத்துடன் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது சம்பந்தமான பரிந்துரைகள் இதுவரை அரசமைப்புப் பேரவைக்கு கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

இந்த நிலைமையில், விக்கிரமரத்னவுக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப் படலாம் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் பொலிஸ் மா அதிபர் பதவியை பெற பல சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

# மாத்தறையில் இரு பெண்களை கொலை செய்த நபர் சிக்கினார்

மாத்தறை பிரவுன்ஸ் ஹீல் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றிற்குள் நுழைந்து பணிப் பெண்கள் இருவரையும் தடியால் அடித்து கழுத்தை நெரித்து கொலை செய்து, வீட்டில் இருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை திருடிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாத்தறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலடுவ, மாலிம்பட, அகலவத்தையை சேர்ந்த கொத்வில விதாரணகே நிமலாவதி (வயது 67) மற்றும் வல்கம மாதோட்டகம பகுதியைச் சேர்ந்த ஹேவா பின்னதுவாகே விமலாவதி (வயது 70) என்ற இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த இருவரும் வீட்டின் குளியலறையில் கொல்லப்பட்டமையையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, விசாரணைகளை ஆரம்பித்த மாத்தறை தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் ரொஷான் ஹெட்டியாராய்ச்சி உள்ளிட்ட குழுவினர், அருகில் உள்ள வீடொன்றின் சிசிடிவி கமராக்களை சோதனை செய்து கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கைது செய்தனர்.

# ஒன்பது மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, ஒன்பது மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நாளை பிற்பகல் மூன்று மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, காலி, மாத்தறை, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, களுத்துறை மாவட்டத்தின் மத்துகமை, இங்கிரிய மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு நிற முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாத்தறை மாவட்டத்தின், அக்குரஸ்ஸ, பிட்டபெத்தர மற்றும்



ஹக்மன பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு நிற முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, இமதுவ, நாகொடை மற்றும் யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு நிற முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.




# தமது படக் ‘கட்-அவுட்கள்’ வேண்டாம் என்கிறார் ரணில்

தனது படத்தை இனிமேல் ‘கட்-அவுட்கள்’ மற்றும் சுவரொட்டிகளில் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுக் காலை கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் கோஷம் அன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே இன்றைய தேவை.

கட்அவுட் மற்றும் அரசியல் கோசங்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோஷங்கள் மற்றும் கட்அவுட் அரசியலுக்குத் தான் எப்போதும் எதிரானவர் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, புதிய அரசியல் பயணத்திற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளில் நேற்றும் முன்தினமும் கலந்துக்கொண்ட ஜனாதிபதி, செங்கலடி மத்திய மகா வித்தியா லத்திற்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தனது மிகப் பெரிய கட்அவுட்டை நேற்றிரவு அவதானித்ததுடன் அதனை உடனடியாக அப்புறப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்திருந்தார்.



# “பிரதீபா பிரபா” விருது வழங்கிக் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நஸார், பிரதி அதிபர் ஏ.பி.ஷெரோன் டில்ராஸ், ஆசிரியர்களான ஏ.எல்.இர்ஷாத் மற்றும் கே.எல்.ஏ. ஜெபர் ஆகியோர் கல்வி அமைச்சால் “பிரதீபா பிரபா” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற ஆசிரியர் தின தேசிய விழாவின் போது இவர்களும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## பயணிகளை ஏற்றுவதில் போட்டி:

# ஹொரணையில் இரண்டு பஸ்கள் மோதியதில் 6 பேருக்குக் காயம்!



ஹொரணை, பல்லாபிட்டிய பிரதேசத்தில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 6 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஹொரண தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த அதே நேரத்தில் விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி ஒருவரை பயணிகளும் பிரதேச மக்களும் தாக்கியதையடுத்து பொலிஸார் தலையிட்டு சாரதியை பெரும் பிரயத்தனத்தின் பின்னர் மீட்டு கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேர் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு பஸ்ஸில் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டித்தன்மையே காரணம் எனக கூறப்படுகிறது.

## திருமலையில் வீதியில் அனுமதிக்க முடியாத

# 8 மோட்டார் சைக்கிள்களுடன் எட்டு இளைஞர்கள் சிக்கினர்

(ஹஸ்பர்)

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சாம்பல் தீவுப் பகுதியில் வீதியில் அனுமதிக்க முடியாத எட்டு மோட்டார் சைக்கிள்களுடன் 8 இளை ஞர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள்கள் போட்டிக்காகக் கொண்டு வரப்பட்டன எனவும், இதில் 6 மோட்டார் சைக் கிள்களுக்கு அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் நிலாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 20 தொடக்கம் 25 வயதுடைய மீகமுவ மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைதான இளைஞர்களை உரிய மோட்டார் சைக் கிள்களுடன் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரனைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




# தென் மாகாணப் பாடசாலைகளின் பரீட்சைகள் பிற்போடப்பட்டன

தென் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரண மாக தென் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் இரண்டாம் தவ ணைப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தென் மாகாண ஆளுநர் தெரிவித்துள் ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அத்துடன், இந்தப் பாடசாலைகளுக் கான பரீட்சை திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தென் மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரி

# கொழும்பில் உயர்நீதிமன்ற முன்றிலில் இன்று சட்டத்தரணிகள் கவனவீர்ப்புப் போராட்டம்!

நீதிபதிகளினதும் நீதித்துறையின தும் கௌரவத்தையும், சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இன்று கொழும்பில் உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகுகின்றார் எனக் குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு தமது இராஜி னாமாக் கடிதத்தை அனுப்பிவைத்திருந் தார். அத்துடன் அவர் நாட்டிலிருந்தும் வெளியேறியுள்ளார். இந்த சம்பவம் பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியி லேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ்டோர்ப்பில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடு வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் நீதிமன்ற சுயாதீனத்து வத்தை உறுதிப்படுத்துமாறும், நீதி பதிகள் மற்றும் நீதிக்கட்டமைப்பின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறும், முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி. சரவணராஜாவுக்கான நீதியை நிலை நாட்டுமாறும் வலியுறுத்தி முன்னெடுக் கப்படவுள்ள இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகளுக்கும் சட்டத்தரணிகள் அல்லாதோருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த போராட்டத்தில் அனைவரினதும் பங்கேற்பானது, நீதிக் கட்டமைப்பின் சுயாதீனத் தன் மையைப் பாதுகாப்பதில் அனை வரும் ஒன்றி ணைந்து நிற்பதைக் காண்பிக்கும் என்று முல்லைத்தீவு சட்டத்தணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள் ளது.




# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் சேவை நாளை தொடக்கம்

நாகப்பட்டினம் – காங்கேசன்துறை இடையே நாளை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சேவையில் ஈடுபடவுள்ள செரியாபாணி (Cheriyapani) கப்பல், நேற்றும் இன்றும் சோதனை ஓட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

25 கோடி இந்திய ரூபா செலவில் கொச்சினில் தயாரிக்கப்பட்ட செரியாபாணி கப்பல் மணித்தியாலத்திற்கு 36 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கக்கூடியது.

14 ஊழியர்கள் மற்றும் 150 பயணிகளுடன் பயணிக்கும் வசதிகளை கொண்ட இந்தக் கப்பலில், பயணிகளுக்கு தேவையான சிற்றுண்டி, தேநீர், குளிர்பானங்கள் போன்றவற்றை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சேவைக்காக தயாரிக்கப்பட்ட செரியாபாணி கப்பல் நேற்று நாகை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலுக்கு சிறப்பு வரவேற்பும் அளிக்கப்பட்டுள்ளது. பின்னர் அது காங்கேசனுக்கு வந்து திரும்பியுள்ளது.

நாகை – இலங்கை கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவருக்கு ஒருவழி கட்டணமாக 27,000 ரூபாவும் இருவழி கட்டணமாக 53,500 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

# மாத்தறை உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன அறிவிப்பு

பலத்த மழை காரணமாக நீர்மட்டம் உயர்வடைவதால் மாத்தறை மின்சார சபையின் கிரிட் (இணைப்பு) உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகிறது என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் கஞ்சன தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தேவையேற்படின், பாதுகாப்பு நடவடிக்கையாக மாத்தறை கிரிட் உப மின் நிலையத்தை பாதுகாப்பாக மூடுவதற்கு திட்டமிட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

தெனியாய மற்றும் பெலியத்த உப மின் நிலையங்களின் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்க, மின்சார சபை திட்டமிட்டுள்ளது. உப நிலையங்கள் மூடப்பட்டதன் பின்னர் அங்கு பணிபுரியும் மின்சார சபை ஊழியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்காக கடற்படையின ரால் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள் என என்றும் அமைச்சர் கஞ்சனவின் சமூக வலைத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.



# டிப்போக்களுக்கு அருகில் உள்ள ஆபத்தான மரங்களை அகற்றுங்கள்

## இலங்கை போக்குவரத்துச் சபை பணிப்புரை

டிப்போ மற்றும் பஸ் தரிப்பிடங்களுக்கு அருகில் ஆபத்து ஏற்படுத்தக் கூடிய வகையிலுள்ள மரங்களை அகற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் பஸ்ஸொன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் பொலிஸார் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறி, பஸ் போக்குவரத்தில் ஈடுபட வேண்டாம் எனவும் அனைத்து டிப்போகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.10.2023




உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்து அதன் மூலம் பிரகாசிக்கலாம். கலை மற்றும் இசை போன்றவற்றில் ஈடுபட்டு பயனடையலாம். உங்கள் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்தலாம். இன்று அதிக முயற்சி எடுத்து அதிக பலன் பெறும் நாள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். புதிய விஷயங்களை கற்றுக்கொள்வீர்கள். பணி நிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் பழகும் போது நகைச்சுவை உணர்வு வெளிப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் தேவையைக் காட்டிலும் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள் தைரியம் உங்களுடைய ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும்.




உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும். பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் திறமை உங்கள் பணியில் வெளிப்படும். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும் நல்ல வாய்ப்பு இன்று காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாகப் பழகுவீர்கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்துகொள்ள உதவும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்களை அடைவதற்கு ஏதோ ஒன்று குறைவது போல உணர்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு சரியாக திட்டமிட வேண்டியது அவசியம். உங்களின் பாதி வேலை முடியும், இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் உறவு செழித்து வளர உங்கள் சஞ்சலமான மனது உகந்ததல்ல. உங்கள் துணையிடம் உங்கள் உள்ளத்தை வெளிபடுத்த முடியாது. இன்று அனுசரணை தேவை.

பணம் இன்று குறைந்து காணப்படும். பண வரவு காணப்பட்டாலும் அதில் திருப்தி இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று விரைவான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இதனால் நல்ல வாய்ப்புகளை இழக்காமல் தடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையைத் தரும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

எளிய விஷயங்களையும் இன்று கடுமையாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பாரமரிக்க உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சகஜமாக இல்லாவிட்டால் திருப்தி கிட்டாது.

தேவையற்ற செலவுகளால் உங்கள் பணம் கரையும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே உள்ளது.




உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை. பாடல்கள் கேட்பது, திரைப்படம் பார்ப்பது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். இதனால் செய்த வேலையையே திரும்ப செய்ய நேரும்.

தகவல் பரிமாற்றத்தில் சில குழப்பங்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கடுமையாக உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். விட்டுக் கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைக்கலாம்.

நிதியைப் பொறுத்தவரை உங்கள் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும். ஆனால் அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்றைய நாள் அபாரமாக இருக்கும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் நெருங்கியவர்களின் இதயத்தை தொடுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் பணி செய்யும் முறையை மேம்படுத்துவீர்கள்.சக பணியாளர்களுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப்படுத்தலாம். நீங்கள் பொருத்தமான ஜோடிக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

இன்று வரவு அதிகமாக காணப்படும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.




உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை ஆக்கபூர்வமான நாளாக ஆக்கலாம். உறுதி மற்றும் முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம். இன்றைய நாள் பயனுள்ளதாக அமையும்.

இன்று பணியிடத்தில் அபாரமான வெற்றி கிடைக்கும். உங்கள் பணியில் கூடுதல் பலன்களும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். தகவல்களை சிறந்த முறையில் பரிமாற்றம் செய்வீர்கள். உங்கள் வசீகரமான பேச்சு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. புதிய முதலீடுகளும் பயன் தரும்.




இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே அமைதியாக எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணியாற்றினால் சிறந்தது.

மனதில் கவலை தரும் எண்ணங்களை வளர்ப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்படலாம். இசையை கேட்பதன் மூலம் அல்லது தியானம் மூலம் அமைதி பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.10.2023




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்கள் மனதில் காணப் படும் குழப்பம் காரணமாக உங்கள் ஆர்வம் குறையும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். முடிவெடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்களை தயார்படுத்திக் கொள்வதன் மூலம் வெற்றியை அடையலாம்.

உங்களின் மாறுபடும் மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து அமைதியாக இருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். பணம் சேர்ப்பதற்கு தடைகள் காணப்படும். சில பரபரப்பான தருணங்களை சந்திக்க நேரும்.

வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால்




உங்கள் வீட்டில் விருந்தினர் வரு கையால் இன்று உற்சாகம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் முழு ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறையால் உங்கள் பிரியமானவர் மகிழ்ச்சியடைவார்.

இன்று உங்கள் பணத்தேவைகள் பூர்த்தியடையும் நாள். இன்று உங்களுக்கு பெரிய அளவில் பணம் கிடைப் பதற்கான அதிர்ஷ்டமான நாள்.




இன்று அமைதி நிலவும் நாள். உங்களை நிரூபிக்க வாய்ப்பு கிடைக்கும் நாள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். திறமையுடன திட்டமிட்டு உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

காதல் வயபட்ட உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவர் உங்களை நேசிப்பார்.

உங்கள் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இன்று செழிப்பான நிலை காணப்படும். இன்று உங்களுக்கு தேவையான ஆற்றல் காணப் படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் உங்களுக்கு வழி காட்டும்.




இன்று முக்கிய முயற்சிகள் கூட சிறந்த பலன்களை அளிக்காது. நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள். பிரார்த் தனை மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் ஏமாற்றத்தைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை முடிப்பதற்கு கவனம் செலுத்துங்கள்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். நிதிநிலைமை செழிப்பாக இருக்காது.

அதிக மன உளைச்சல் காரணமாக நீங்கள் சோர்வாக காணப்படுவீர்கள். தொடை வலியால் அவதிப்படுவீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thamilan
Group Chairman





CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Karaithivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

